திராவிடநாடு

27—9—59 | வார வெளியீடு | விலை 16 காசு

நாட்டை மீட்பீர்!

[சா. சதாசிவம்]

கப்பிவிட்ட இருள்துடைக்கக் கழகம் தோன்றிக்
கருத்தொளியைப் பரப்பிவரும் காட்சி கண்டு
செப்டம்பர் பதினேழில் சிந்தை யெல்லாம்
சிங்காரப் பண்பாடும் மாட்சி கண்டோம்
ஒப்புவமை இல்லாத திராவி டத்தின்
விலங்கொடிக்க விழித்துவிட்ட இளைஞர் கூட்டம்
எப்படியும் ஒருநாளில் நாட்டை மீட்கும்
எழிற்றமிழின் பண்பாடு ஆட்சி ஏற்கும்!

உப்பில்லாப் பண்டம்போல் உலவுங் கட்சி
உருவின்றிப் போகின்ற நல்ல காலம்
இப்புவியில் உண்டென்று சரிதம் சொல்லும்!
இன்னும்மரன் இதயத்தை அடகு வைத்து
நப்பாசை கொண்டலைந்து நமது நாட்டை
நரிநெஞ்சம் படைத்தோரின் பிடியில் வைக்க
ஒப்புகின்றீர் ஓரவஞ்சம் தெரிய வில்லை?
இப்படையில் சேர்ந்திடுவீர் நாட்டை மீட்பீர்!

பத்தோடு பதினொன்று கழகம்? அல்ல;
பகுத்தறிவுப் பாசறையே அஃது! ஆமாம்!
புத்தொளியில் பழைமைதனைப் புதைத்து விட்டுப்
புதுவாழ்வு பெறுவதற்கு விரைந்து வாரீர்!
பித்துமனம் நமக்கில்லை; ஆள்ப வர்கள்
பிதற்றுகின்ற கதைபற்றிக் கவலை இல்லை!
இத்தரையில் தனிஅரசு பெற்று வாழ
இளைஞர்காள்! விழித்தெழுவீர்! நாட்டை மீட்பீர்!

"இதயமற்றோர் — இங்கிதம் உணராதோர்—பண்பு மறந்தோர்" என்று என்னென்னவோ சொற்களை அள்ளிக்கொட்டி, ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளத் துடிக்கிறது இதயம்! அந்த அளவு எரிச்சல் எனக்கு!

ஆனால், அங்ஙனம் பேசுவது அரசியல் நாகரிகமல்ல என்பதை உணருகின்ற காரணத்தால் நாவடக்கத்தை நானாக வரவழைத்துக் கொள்ளுகின்றேன்—ஓரளவுக்கு!

நாவடக்கம் பெறுதற்கு மற்றும் ஓர் காரணமும் உண்டு. உலகத்திலே தோன்றியிருக்கின்ற பெரிய பெரிய இராசதந்திரிகளில் நானும் ஒருவனென்று பெயரெடுக்க விரும்புகின்றேன். ஆத்திரப்பட்டு இன்று சொற்கணைகளை வீசிவிட்டால், நாளை உலகம் என்னை எப்படி இராசதந்திரி என்று ஏற்றுக் கொள்ளும்?

நான் அமெரிக்காவுக்கு வந்தேன்! தனி மனிதனாக அல்ல—பெரியதோர் நாட்டின் தூதுவனாக! அந்த நாடும் பெயர் தெரியாமல் இருக்கின்ற நாடுகளிலே ஒன்றல்ல—வல்லரசு! அதுவும், சந்திர மண்டலத்தை எட்டிப் பிடிக்கின்ற அளவுக்கு விஞ்ஞான அறிவினையும் நுணுக்கங்களையும் வளர்த்துக் கொண்டிருக்கிற வல்லரசு. எந்த நாடும் அதனோடு போட்டியிட இயலாது என்ற அளவுக்கு ஆயுத பலத்தை வளர்த்துக்கொண்டிருக்கிற சோவியத்!

அந்த நாட்டின் பிரதமர் நான்—அப்படியென்றால் முடிசூடா மன்னர் என்று பொருள் அங்கே!—எதிர்த்துக் கேட்க ஆளெவரும் இல்லையென்ற நிலை!

செய்தி

சோவியத் நாட்டின் பிரதமர் குருஷேவுக்கு அமெரிக்காவில் நல்ல முறையில் வரவேற்பு அளிக்கப்படவில்லையென்றும், சில இடங்களில் அவர் ஆத்திரமாகக்கூடப் பேசியிருக்கிறார் என்றும் செய்தித் தாள்கள் கூறுகின்றன.

இவ்வளவு பெருமைகளையும் உடனழைத்துக்கொண்டுதான் நான் அமெரிக்காவிலே இறங்கினேன்!



வரவேற்பா அளித்தார்கள் அங்கே? பிரேத ஊர்வலங்களிலே நிலவுமே அமைதி, அந்த அமைதியல்லவா என்னைப் பார்க்கவந்த கூட்டத்திலே இருந்தது! ஒரு கைதட்டல், ஒரு மகிழ்ச்சி ஆரவாரம்...? எதுவுமே இல்லையே! ஏன்? மிருகக்காட்சிச் சாலையிலேயிருந்து ஊர்வலமாக ஒரு மிருகம் அழைத்துவரப்பட்டால், அதைக் காண்கின்ற மக்களாவது ஓரளவு ஆரவாரம் செய்வார்கள்! ஆனால், ...சொல்லவே வெட்கப்படுகிறேன்! எனக்கு, ஏற்பட்ட கதியை நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது!

M. S. வெங்கடாசலம், M. A.,

அப்போதெல்லாம் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டேன்! ஆனால், வியாபாரிகள், நியூயார்க் நகரில் எனக்களித்த வரவேற்பின் போது, துளைத்துத் துளைத்துக் கேட்டார்களே பற்பல கேள்விகள்—அவைகளைக் கண்டபோது எரிச்சலை என்னால் அடக்கிக் கொள்ள முடியவில்லை!

அதனால்தான், சற்று உரத்த குரலில், "நானொன்றும் உங்கள் நாட்டுக்குப் பிச்சை எடுக்க வரவில்லை—பெரியதொரு நாட்டின் தூதுவனாக வந்திருக்கிறேன்—அதை மறந்துவிடவேண்டாம்" என்று கூறினேன்! என்ன தவறு இதில்?

பேசிக்கொண்டிருக்கும்போது கூட்டத்தில் சலசலப்பு— இடைவிடாத குறுக்குக் கேள்விகள்! அதனாலேதான் கூறினேன், "அமைதி நிலவவில்லையென்றால், கூட்டத்தைவிட்டு வெளியேறி விடுவேன்" என்று! இதைத்தான் தவறென்று யார் சொல்லமுடியும்?

இந்த நாட்டில் இப்படிப்பட்ட 'வரவேற்பு' கிடைக்குமென்று தெரிந்துதானோ, என்னவோ,

(14-ம் பக்கம் பார்க்க)

கைத்தறியும் கடமையும்!

18 | ஆண்டுச் சந்தா ரூ. 8. (27—9—59) தனிப் பிரதி 16-காசு. [இதழ் 11

"பம்பாயிலிருக்கும் அகில இந்திய கைத்தறி போர்டு, அகில இந்திய ஜவுளி மார்கட்டிங் சங்கம் ஆகியவைகளின் தலைமைஸ்தலத்தைச்சென்னைக்கு மாற்ற வேண்டுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.''

அண்மையில் பூவிருந்தவல்லியில் நடைபெற்ற மாநாட்டில் நிறைவேறிய தீர்மானமல்ல இது. இந்தத் தீர்மானத்தில் எடுத்தாளப்பட்டுள்ள பெருவாரியான வடமொழிச் சொற்களே அதைக் காட்டிவிடும், ஆனால் பம்பாயில் உள்ள ஒரு அமைப்பைச் சென்னைக்கு மாற்றவேண்டும் என்று கேட்பதினால், இது 'வடக்கு வேண்டாம்' என்பவர்கள் தீட்டிய தீர்மானம் என்று கருதச் செய்யும். இந்தத் தீர்மானம் எந்த அரசியல் கட்சி மாநாட்டிலும் நிறைவேறவில்லை. நெசவாளர்களுக்கென அமைந்துள்ள சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய மாநாடு நடைபெற்றபோது, அங்கே நிறைவேறிய தீர்மானம். இது, முதல் தீர்மானமாக நிறைவேறியிருக்கிறது.

'நெசவாளர்களின் கண்ணீரைத் துடைத்துவிட்டோம். இனி அவர்களுக்குக் குறையேதும் இல்லை. உள்ள குறையெல்லாம் எதிர்க் கட்சியினரின் பொய்ப் பிரசாரம்தான்' என்று அமைச்சர் பெருமக்கள் அடிக்கடி கூறிவருகின்றனர். ஆனால் நெசவாளர்களின் பிரதிநிதிகளோ மாநாடு கூட்டி தீர்மானம் நிறைவேற்றுகின்றனர். **ஒன்று இரண்டு தீர்மானங்கள் அல்ல; நாற்பது தீர்மானங்களை நிறைவேற்றுகின்றனர்.** 'எங்கள் குறைகாணீர்,' என்று பட்டியல் தரும்போது அவை நாற்பது தீர்மானங்கள் ஆகின்றன. அந்த நாற்பதிலும் முக்கியமானதாகவும் முதலானதாகவும், பம்பாயில் உள்ள அகில இந்தியக் கைத்தறி போர்டையும், மார்க்கட்டிங் சங்கத்தையும் சென்னைக்கு மாற்றவேண்டும் என்று தீர்மானித்திருக்கின்றனர். ஒருவேளை கழகத்தின் சார்புகொண்டவர்களால் நடத்தப்பட்ட மாநாடோ எனின், அதுவும் இல்லை. காங்கிரஸ் கட்சிக்கு வேண்டியவரான திரு. எம். பி. நாச்சிமுத்து (முதலியார்) அவர்கள்தான் அந்த மாநாட்டின் தலைவர், அவரே அந்த அமைப்புக்கும் தலைவர். அவருடைய தலைமையில் கூடிய அந்த மாநாட்டில் தொழிலமைச்சர் வேங்கடராமனும் கலந்து கொண்டிருக்கிறார். இவ்வளவு 'பெரிய' மனிதர்கள் கூடி நடத்திய மாநாட்டில்தான்.

'பம்பாயில் இருப்பதைச் சென்னைக்கு மாற்ற வேண்டும்'

என்று—முதல் தீர்மானம் போடுகின்றனர்.

ஏன்? பம்பாயில் இருந்தால் என்ன, சென்னையில் இருந்தால் என்ன—எல்லாம் இந்தியாவுக்குள்தானே இருக்கிறது என்று திருப்தியடையக் கூடாதா? முடியவில்லை. இத்தனைக்கும் பம்பாய் வேறு, சென்னை வேறு என்று அவர்கள் கருதுவதில்லை. ஆனாலும் அந்த இரு அமைப்புக்களும் சென்னைக்கு மாற்றப்பட வேண்டும் என்று தீர்மானம் போடவேண்டிய அவசியம் என்ன என்பதை அந்தத் தீர்மானம் விளக்கவில்லை.

ஆனால் 30—8—59-அன்று மதுரையில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் காங்கிரசின் காரியக் கமிட்டியின் கூட்டம் நடந்தபோது அங்கே இதற்கான காரணத்தை அவர்கள் கூறுகின்றனர். அந்தக் கூட்டமும் கழகத்தோடு தொடர்புகொண்டவர்களைக் கொண்டதன்று. அனுதாபம் கொண்டவர்கள் அடங்கியதும் அன்று. இன்னும் சொல்லப்போனால் கழகத்தைக் குழிதோண்டிப் புதைக்கவேண்டும் என்று கூறிவரும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. இராசாராம் அவர்கள் அங்கே சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டிருக்கிறார். அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்று:

"குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்தி எங்கு அதிகம் ஆகிறதோ, அங்குதான் அதன் சம்பந்தப்பட்ட மத்திய அரசாங்கத்தின் போர்டுகள் தலைமைக் காரியாலங்கள் இருந்து இயங்க வேண்டும். அதன்படி கைத்தறி நெசவுத் தொழில் துறையின் கேந்திரமாக விளங்கும் சென்னை இராஜ்ஜியத்தின் தலைநகரான சென்னையில்தான் அகில இந்திய கைத்தறி போர்டின் தலைமைக் காரியாலயம் இயங்கவேண்டும் என இக்கமிட்டி அரசாங்கத்திற்கு எடுத்துக்காட்டுகிறது.''

இந்தத் தீர்மானத்தின்படி,

கைத்தறித் தொழிலுக்கு சென்னையே மிக முக்கியமான இடம்;

என்பது விளங்குவதோடு, அதன் தொடர்புடைய அமைப்பு அங்கேயே அமையவேண்டியதன் இன்றியமையாமையும் சென்னையில்தான் என்று வற்புறுத்தப்படுகிறது. இந்த அடிப்படை உண்மையையும் புறக்கணித்துவிட்டு மத்திய அரசினர் கைத்தறி போர்ட்டைப் பம்பாயில் அமைத்திருக்கின்றனர். தீர்மானம் இந்தக் குறையை எடுத்துக்காட்டுகிறது!

பம்பாயும், சென்னையும் இவர்கள் கண்முன் ஒன்றுதான் — ஏக இந்தியாவில் இருப்பவைதான். ஆனாலும் பம்பாயில் இருப்பது சென்னைக்கு வேண்டும் என்று கேட்பதற்கு என்ன காரணம்?

பம்பாயில் இருப்பதினால் அந்த அமைப்புப் பயன் படவேண்டிய அளவிற்குப் பயன்படவில்லை என்பதை யும்; அதற்கு அடிப்படையான காரணம், அது, **இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல், இருக்கத் தேவையற்ற இடத்தில் இருக்கிறது** என்பதையும் உணருகின்றனர். எனவேதான் '**சென்னை யில்தான்**' என்று அழுத்தமாகக் கேட்கவிரும்புகின் றனர்.

தைலம் தேய்க்கும்போது வலி இருக்கின்ற இடத்தில்தான் தேய்க்கவேண்டும். உள்ளங்காலில் வலி இருக்க, உச்சந்தலையில் மருந்திடுவதினால் பயன் உடனே தெரியாமல் போகும்.

கைத்தறித் தொழில் சென்னையில் மலிந்திருக் கும்போது அதற்கு உதவவேண்டிய 'போர்ட்டு' பம் பாயில் இருப்பதினால் பயன்படுவதில்லை. எனவே தான் சென்னையில் அந்த 'போர்டு' அமையவேண்டும் என்ற பிரச்சினையை நேரடியாக அணுகும்போது தீர்மானிக்கின்றனர்.

இந்த உண்மைகளையும் காரணங்களையும் அறிந்து வைத்தும் மத்திய அரசாங்கம் ஏன் அந்த 'போர்டை' சென்னையில் அமைக்காமல் பம்பாயில் அமைக்கிறது? **உள்ளங்காலில் வலி இருக்க உச்சந்தலையில் மருந்திடுவானேன்?** தெற்கு வளர, வடக்கு விடாது என்று நாம் காரணத் தைக் கண்டறிந்து சொன்னால் அவர்களுக்குக் கண் சிவந்துவிடுகின்றது.

"ஆலைகள் ஆயிரம் அங்கே-ஆறுகளுக்கு அணை அங்கே" என்று உண்மைகளை எடுத்துச் சொன்னால், 'அங்கே ஆறு இருக்கிறது அணை கட்டுகிறார்கள்— இங்கே என்ன இருக்கிறது?' என்று 'சமாதானம்' சொல்வோரை நாம் காணுகின்றோம். அவர்கள் இதற்கு என்ன 'சமாதானம்' சொல்வார்களோ தெரிய வில்லை. **"ஆறு இருக்கும் இடத்தில்தான் அணைகட்டுவோம்" என்றால், தொழில் இருக்கும் இடத்தில்தான் அதன் துறைக்கு அமையும்-அமைப்பும் இருக்கவேண்டும்;** என்று சொல்லாமலே விளங்கும். ஆனால் தொழில் தென்னகத்திலே இருக் கிறது, அதற்கான அமைப்பு வடக்கே இருக்கிறது! இதை, நாம் எடுத்துக்காட்டினால் 'பேதம்,பிரிவு,பிளவு' என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள வழிகிடைக் கும். ஆனால் இந்த உண்மைகளை, காங்கிரஸ் கட்சி யின்பால் ஆர்வமும் தொடர்பும் கொண்டவர்களே தீர்மானமாக எழுதுகின்றனர். அங்கே தீர்மானமாக எழுதிவிட்டுத் தெரு முனையில் வந்து பேசும்போது 'தெற்கும் வடக்கும் ஒன்றுதான்' என்று பேசு கின்றனர்!

அமைச்சர் வேங்கடராமன் கலந்துகொண்ட அந்த மாநாட்டில் நிறைவேறியுள்ள இன்னொரு தீர் மானம்:

"பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஜன வரி மாதம் 7-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை அகில இந்தியக் கைத்தறி வாரத்தை ஒவ் வொரு ஆண்டும் கொண்டாட ஏற்பாடு செய்ய மத்திய அரசாங்கத்தையும் ராஜ்ய அரசாங்கத் தையும் இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது."

இப்போதும் கோலாகலமான ஏற்பாடுகள் செய்து 'கைத்தறி' வாரம் கொண்டாடுகின்றனர். அந்த வாரம் வந்துபோகும்போது கோலாகலங்களில் கலந்துகொள்ளத்தான் முடிகிறதே ஒழிய, துணி வாங்குவதற்குத் தமிழ்—தென்னக நாட்டு மக்களால் முடிவதில்லை. ஆண்டுக்கு ஒருமுறை புத்தாடை வாங்குவதற்கே வயிற்று மூச்சு வாய்க்கு வந்துவிடு கிறது. கடன்பட்டோ உடன்பட்டோ—பத்து இருபது திரட்டி எடுத்துச்சென்று திரும்பி வருவது பெரும் பாடாக இருக்கிறது. இந்தப் பெரும்பாடு நம்முடைய நாட்டைப் பொறுத்தவரை பொங்கல் திருநாளின் போது வருகிறது. ஆனால் கைத்தறியின் பெருமையை விளக்கி, அதனை வாங்கவேண்டும் என்ற ஆவலைத் தூண்டி, விற்பனையைப் பெருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டாடப்படும் வாரம் பொங்கல் போன பிறகு வருகிறது. ஆகையினால் வாங்கும் எண்ணம் இருந்தும் வசதி இல்லாததினால் '**விழலுக்கு இறைத்த நீராகிறது.**

கைத்தறி 'போர்டு' தமிழகத்தில் இல்லாமல், பம்பாயில் இருப்பதினால், இந்த நிலைமை அவர்களுக் குப் புரியாமல், நாட்குறிப்பைப் பார்த்து ஒருகிழமை யைக் குறித்துக் 'கொண்டாடுக' என்று உத்தரவு அனுப்புகின்றனர். இந்த நிலையை நம்முடைய தோழர்கள் கலந்துகொள்ளும் விழாக்களில் விளக்காத தவறுவதில்லை. அப்போதெல்லாம் காங்கிரஸ்காரர் கள், 'இதிலேகூட, விழாக்களிலேகூட வேறுபாடு காட்டுகிறார்கள் பார்' என்று விவரமறியாது தூற்றி னர். ஆனால் இப்போது நெசவாளர்களின் மாநாடு தீர்மானம் எழுதுகின்றது பொங்கலின்போது 'வாரம்' வேண்டும் என்று.

காலம் கடந்தாலும், கருத்துப் புலப்படுகிறது உண்மை வெளிப்படுகிறது! கைத்தறித் தொழிலுக் குக் கைகொடுப்பதற்குத்தான் இந்த 'போர்டு' இயங்கி வருகிறது என்று கூறுகின்றனர். அந்தப் 'போர்டு' சென்னையில் இருக்குமாயின் தொழில் துறையில் நல்ல பயனுள்ள பணிகளைச் செய்யும். 'இப்போது மட்டும் செய்யவில்லையா என்ன?' என்று கேட்டு, இத் தனை பணம் இதற்குச் செலவாகியுள்ளது, இத்தனை இதற்கு இவ்வளவு பாடுபட்டிருக்கிறோம், இதைச் செய்கிறோம், இன்னும் அதைச் செய்யப்போகிறோம்— என்று அரசினர் பட்டியல் தரக்கூடும். அப்படித் தருகின்ற அவ்வளவு பட்டியல் தந்தும்—அதற்குப் பிறகும் 'குறைகளைக் கேளீர்' என்று தீர்மானம் எழுத உட்கார்ந்து ஏராளமான தீர்மானங்களை நெசவாளர் கள் நீட்டுகின்றனர். அவர்கள் பாலுக்குச் சர்க்கரை கேட்கவில்லை. கூழுக்குக் கேட்கும் உப்புத்தான கிடைக்கவில்லை என்கின்றனர்.

அகில இந்திய கைத்தறி ஜவுளி மார்க்கட்டிங் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. எம். சோமப்பா **திரு. எம். பி. நாச்சிமுத்து(முதலியார்)** காங்கிரஸ் எம்.எல்.ஏ. **திரு. ஏ. மாரியப்பன் திரு. அஜீஸ்சுல்சலே, திரு. அப்துல்மஜீத்**

(13-ம் பக்கம் பார்க்க)

வேலை நிலைத்தது... ஆனால்...!

முத்துசாமி ஓடி ஆடி வந்து அமர்ந்தார். பெரிய பந்தயத்திலே தோற்றுவிட்டதுபோல இருந்தது அவரது உள்ளமும், உடலும். வந்து அமர்ந்ததுமே மனம் சலிக்க, "சே! எவனைக் கேட்டாலும் சின்னவனுக்குத்தான் பெண் கொடுக்கிறேன் என்கிறான்களே தவிர; பெரியவனை விட்டுவிட்டுச் சின்னவனுக்கு எப்படித் திருமணம் செய்வாங்க என்பதே தெரியவில்லையே!" என்றார் தனக்குத்தானே.

இதைக் கேட்டுக்கொண்டே வந்த அவர் மனைவி, "எல்லாம் பணம்தான்; அந்தக்காலத்திலேதான் குணம், படிப்பு, அறிவு எல்லாம் பார்ப்பார்கள்" என்றாள்.

"ஆமா, பையன்களை நம்புவதைவிட அவர்கள் சம்பாதிக்கிற பணத்தைத்தான் நம்புகிறார்கள்" என்றார்.

'அதுசரி, போனது என்ன ஆயிற்று?" என்றாள்.

"எல்லாம் அப்படித்தான்" என்றார் சலிப்பாக.

இரண்டு பேரிடமிருந்தும் நீண்ட பெருமூச்சு, வெளிப்பட்டுக் காற்றோடு காற்றாகக் கலந்தது. உண்மையில் அந்த மூச்சுக்கு மட்டும பேசும் ஆற்றல், இருந்தால், அவர்கள் உள்ளத்திலே எழுந்து அலைமோதிக் கொண்டிருக்கும் வேடிக்கையும், விநோதமும், அதே நேரத்தில் வேதனையுமான அந்த நிகழ்ச்சியை விரல்படக் கூறத்தவறாது.

முத்துசாமி "ஊம்... நாமும்தான் மூன்று மாதமா தேடு தேடுன்னு தேடுகிறோம்" என்றார்.

"தேடி என்ன செய்கிறது, சின்னவனுடைய உத்யோகத்தைப்பற்றி ஊரெல்லாம் தெரிஞ்சிருக்குதே" என்றாள் மனைவி.

"அண்ணன் தம்பிகளுக்குள்ளே பகை இல்லாவிட்டாலும் அவர்களின் உத்யோகம் பகையாகக் கிடக்குது" என்றார் மனம் பேதலிக்க. மறுபடியும் பெருமூச்சு... அமைதி... எல்லாம்.

> மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையே காட்டப்படும் சம்பள உயர்வுதாழ்வினால் ஏற்பட்ட ஒரு குடும்பத் தொல்லையை விளக்குவதோடு, அரசினரின் ஆட்சி முறையின் பாரபட்சத்தையும் எடுத்துக் காட்டுவதாக அமைகிறது இக் கட்டுரை.

இந்த நேரத்தில் தெருவாசல் வழியாக ஒரு குரல் கேட்டது; "இனிமேல் அந்தப்பகைக்கு வேலையே இல்லையப்பா" திரும்பிப் பார்த்தார், சின்னவன் சித்திரவேலு சிரித்தபடியே வந்துகொண்

கரந்தை—கணேசன்

டிருந்தான். அவனைக்கண்டவுடனேயே முத்துசாமிக்கு மின்சாரக் கம்பியைத் தொட்டதுபோன்று ஆகிவிட்டது. பகைப்பற்றித், தான் பேசியதன் விளைவாக ஏதும் பகை வந்துவிடக் கூடாதே என்ற அதிர்ச்சி அவரை அலைக்கழித்தது.

சித்திரவேலு பேசினான், "ஆமப்பா, இனி எல்லாம் இனிதே முடியும். அண்ணனுக்குப் பெண் கொடுக்க நான் நீ என இனி வந்து விடுவார்கள் பாருங்களேன்" என்றான். அவன் முகத்திலே மகிழ்ச்சி நிழலாடியது, உள்ளத்திலே குதூகலம் கரைபுரண்டது, சொற்களிலே அதன் சாயல்கள் இதமாக நடமாடின.

"என்ன......? பெண் கொடுக்க வந்து விடுவார்களா?" தாய் தந்தையர் இருவர் நாவும் ஒரேவிதமான சொற்களை உதிர்த்தன ஏககாலத்தில். ஆச்சரியக்குறி கேள்விக் குறிக்குள் புகுந்தது.

'ஆமாம்..." என்றான் சித்திரவேலு. அந்தச் சொல்லிலே தன் கடமையை ஆற்றிவிட்ட பெருமிதம் உலாவந்தது.

"என்னப்பா சொல்கிறாய்; புரியவில்லையே" என்றார் தந்தை முத்துசாமி.

"புரியவதென்னப்பா; நான் வேலையைவிட்டு விட்டேன்" என்றான் கெம்பீரமாக.

"அடபாபி..." தாய் தந்தையர் இருவர் வாயும் மறுமுறையும் ஒன்றுபட்ட சொற்களைக் கொட்டின.

தந்தை மட்டும் பேசினார், "என்னடா இப்படிச் செய்துவிட்டாய். வேலை போனால் கிடைக்கக்கூடிய காலமா இது? குதிரைக்கொம்பு கூடக் கிடைத்துவிடும்; வேலை கிடைக்காதேடா" என்றார். அவருடைய வயிற்றில் யாரோ அனலை அள்ளிக்கொட்டிவிட்டது போன்றிருந்தது.

"அது சரிதானப்பா, நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அண்ணனுக்குப் பெண் கிடைப்பது முயற்கொம்பாக அல்லவா இருக்கிறது. அதற்கு நான் கண்ட ஒரே வழி இது தான். வேலையை விட்டுவிடுவதுதான் என்று கூறினன்.

முத்துசாமியின் உள்ளம் கொதித்து எரிமலையாகக் குமுறினர். "என்னடா அதுக்கு நீ என்ன வேலை செய்றது? அவனுக்கு இப்போது பெண் கிடைகாட்டி இன்னும் இரண்டு மூன்று மாதத்திலே கிடைச்சிடறது. இப்ப நம்ப குடும்பம் இருக்கிற நிலையிலே இதெல்லாம் என்னடா விளையாட்டு?

"விளையாட்டு இல்லையப்பா உண்மைதான். வேலை போச்சு. ஆனால் என் அண்ணனுக்குத் திருமண வேளை வந்துச்சுங்கிறதே போதும்" என்று கூறியபடியே எதையும் எதிர்பாராமல் வெளியே உலாவச் சென்றுவிட்டான்.

முத்துசாமி, மகன் போனபிறகு மனைவியிடம் பாய்ந்தார், "என்ன நீபாட்டுக்குக் கேட்டுக்கிட்டுச் சும்மா இருக்கிறயே" என்று. அவர்கள் என்ன செய்வார்கள் பாவம், அமைதியாக அடுக்களைக்குள் சென்றுவிட்டார்கள்.

*

சித்திரவேலு தன் வேலையை விட்டுவிட்டது இரண்டு மூன்று நாட்களுக்குள் ஊர்முழுதும் பரவி உற்றாரிடம் பரவி, உறவுமுறையாரிடமும் பரவிவிட்டது, அவனுடைய விலகலைப்பற்றிக் கவலைப்பட்டவர்கள் தாய்தந்தையர் மாத்திரமல்ல; அவன்மீது ஒரு கண்வைத்திருந்த பெண் வீட்டார்கள் பலருண்டு--அவர்களும் கூடத்தான். அதைச் சித்திரவேலுவும் அறிவான். திருமணம் என்பது தற்காலத்தில் வேடன் வைக்கிற கண்ணிபோலத்தானே என்று கூறிக்கொண்டான்.

சித்திரவேலுவுக்குப் பெண் கொடுக்கப்பெண்வீட்டார்சொன்ன காரணம் என்ன வோ புதுமையாகத்தான் இருந்தது. அவன் அண்ணனைவிட அதிகம் படித்தவனும் அல்ல, அண்ணனாவது கலை இளவல் (பி. ஏ.) பட்டதாரி. நல்ல குணநலனும் எளிமையும் இனிமையும் கொண்டவன். அதனாலே சித்திரவேலுவுக்கு இத்தகு குணநலன் தன் இல்லை என்பதல்ல. இருந்தாலும் அண்ணனைப்போல அவ்வளவு அமைதியானவன் அல்ல, சற்றுத் துடிப்பானவன். தம்பி தானே! சித்திரவேலுவின் படிப் பென்னவோ எஸ். எஸ். எல். சி. தான்; எனினும் இவனுக்குத்தான் யோகம்.

இதை எண்ணும் பொழுது சித்திரவேலுவுக்கே ஆச்சரியமாக இருக்கும். சில சமயங்களில் பெருமிதமாகக்கூடக் கருதுவான், எனினும் தன் பெருமிதம் தன் அண்ணனைத் தாக்குகிறது என்னும் பொழுது தளர்ந்துபோய்விடுவான். இத்தனைக்கும் அவன் கண்ட மொத்தமான ஒரேகாரணம், தான் மத்திய அரசின் அலுவலாளனாக இருப்பதும், தன் அண்ணன் மாநில அரசின் அலுவலாளனாக இருப்பதும்தான் என்று கண்டான். ஒரேவேலை—எழுத்தர் வேலை; (கிளார்க்) எனினும் வேறுபட்ட ஊதியங்கள், அதனாலே அண்ணனுக்குப் பெண் கிடைக்காமை. அதன் விளைவு தான் அவன் விலகல்.

சித்திரவேலு செய்த விலகலின் எதிரொலி அவன் எதிர்பார்த்தது போலவே இருந்து அண்ணன் சோமசுந்தரத்தின் திருமணத்தைக் கூட்டிவைத்தது. இப்பொழுது மணவேட்டையிலே பல மாமனார்கள் இறங்கிச் சோமுவைக் குறிபார்த்தனர். எதிர்பாராதவிதமாகக் கேட்பாரற்றுக் கிடந்த சரக்குகளுக்குச் சந்தையில் கிராக்கி ஏற்படுவதுபோலச், சோமுவுக்குமாப்பிள்ளைச் சந்தையில் நல்ல கிராக்கி ஏற்பட்டது. முத்துசாமியாருக்குச் சொல்லிதரவாவேண்டும்! தான் அலைந்த அலைவுக்கெல்லாம் பழிதீர்த்துக்கொண்டார். பலமான வரதட்சணையுடன் பெண் முடித்தார். நல்ல முறையில் சோமசுந்தரத்தின் மணமும் நடந்தேறியது. எல்லோரும் மணமக்களை வாழ்த்தினர். செய்திதெரிந்தோர் மணமக்களை வாழ்த்திய அதே வாயாலேயே சித்திரவேலுவையும்வாழ்த்தத் தவறவில்லை.

*

பின்னர் எல்லோரும் மணவீட்டார் இருவரிடமும் விடை பெற்றுக்கொண்டிருந்தனர். சித்திரவேலுவிடம் சொல்லிச் செல்ல அவனைக் காணவில்லையே என்று சிலர் தேடினர். அந்தச் சமயமாக வந்த சித்திரவேலு பெட்டி, படுக்கை சகிதமாகக் காட்சியளித்தான்.

"என்னப்பா இது பெட்டி, படுக்கையெல்லாம்" என்றனர் சிலர் ஏக காலத்தில்.

"ஆமப்பா, கலியாணம் முடிந்து விட்டது; கடமை இருக்கிறதல்லவா?"

"என்ன கடமை—? அதுதான் வேலையைவிட்டு விட்டாயே" என்றான் உறவினன் ஒருவன். அதற்குள் முத்துசாமிக்கும் சோமுவுக்கும் மற்றையோருக்கும் தெரிந்து எல்லோரும் ஓடிவந்தனர். வந்தவர்கள் எல்லோரும் "என்ன? என்ன? எங்கே புறப்பட்டு விட்டாய்?" என்று திரும்பத் திரும்பக் கேட்டனர்.

புன்முறுவல் பூத்தபடியே சித்திரவேலு, "ஆயிரம் பொய் சொல்லி ஒரு திருமணத்தை முடி என்பார்கள். நான் ஒரு பொய் சொல்லியே என் அண்ணன் திருமணத்தை முடித்துவிட்டேன்" என்றான்.

"பொய்யா"? என்றார் முத்துச்சாமி. "ஆமப்பா, நான் வேலையை விட்டு விலகவில்லை; ஓய்வுதான் பெற்றிருந்தேன் ஒருமாத காலத்திற்கு. அது திருமணத்தோடு இன்றுடன் முடிகிறது. நாளை காலை சென்னையில் உத்தியோகம்" என்றான்.

'சென்னையிலா?" என்றான் சோமு கண்களை அகலவிரித்து.

"ஆமண்ணா, ஒருமாத விடுமுறை எடுத்திருந்ததால்இங்கிருந்துசென்னைக்கு மாற்றிவிட்டார்கள். இதோ ஆர்டர்" என்றான் உத்தரவைக் காட்டியபடியே.

சோமுவின் மனம் என்ன சொன்னதோ தெரியவில்லை "தம்பி..."! என்ற உரத்த குரலோடு சித்திரவேலுவைக் கட்டிக்கொண்டான். கண்களிலிருந்து பொல பொல வென்று கண்ணீர் உதிர அவன் வாய் பேச முடியாமல் தவித்தான்.

அன்றிரவே சென்னை நோக்கிச் சித்திரவேலு பயணமானான். புகைவண்டி நிலையத்தில், சோமு, இன்னும் சில மாதங்களில் தன்க்கொரு கொழுந்தியைக்கண்டு வருவதாகக் கூறி விடைபெற்று வந்தான். ஊர் முழுதும் சோமசுந்திரத்தின் திருமணத்திற்குச் சித்திரவேலு கையாண்ட முறைபற்றியே பேசித் தீர்த்தனர்.

*

விரைவில் வருகிறது!
சிவாஜி கணேசன்
அளிக்கும்
சரவணா பிலிம்ஸ்
பாகப்பிரிவினை
டைரக்ஷன்...A.பீம்சிங்
கதை வசனம்..M.S.சோலைமலை
இசை..விஸ்வநாதன்-ராமமூர்த்தி
கேமரா..G.விட்டல்ராவ்
ELEGANT
தயாரிப்பு...G.N.வேலுமணி
உலக உரிமையாளர் அஜந்தா அருணாசலம் & எம். திருப்பதி திருச்சிராப்பள்ளி

தென்னகம் அடிமைப்பட்டதேன்?

—(ச. கனகராசன்)—

நமது நாடு, பழங்காலந்தொட்டுப் பல்வளமும் பெற்றுத் திகழ்ந்ததாகும். நமது மொழி, காலத்தால் முன்தோன்றிய முதுமொழியாகும். நமது நாட்டுக் கலையையும் கலாச்சாரத்தையும், நாகரிகத்தையும் கண்டு வேற்று நாட்டார்கள் வியந்து, தாங்களும் நம்மைப் பின்பற்றத் தொடங்கினர்.

நமது நாட்டு முத்தும், மிளகும், அகிலும், தேக்கும், மற்றும் வாசனைப் பொருள்களும் விலைமதிப்புள்ள கம்பளமும், இரத்தினமும், மஸ்லினும் மேலை நாடுகளில் எதிர்பார்க்கப்பட்டது, அந்த நாளில். கிரேக்கத்திலும் எகிப்திலும் நமது தென்னகத்துமுத்துக்களைப்பொன் கொடுத்து வாங்குவார்களாம். கொடுங்கோல் வேந்தன் நீரோ முத்துக்களைச் செருப்பிலே பதித்து அழகு பார்த்தானும். எழிலரசி கிளியோபாட்ரா நமது தென்னகத்துமுத்துக்களைச்சாராயத்தில் போட்டுக் குடித்தாளாம்! இது போன்று நம் நாட்டுப் பொருள்களுக்கு மேற்கத்திய நாடுகளில் நல்ல மதிப்பு இருந்தது!

இத்தகு சிறப்புக்களைப் பெற்றிருந்த நம் நாட்டு மன்னர்கள் பண்டை நாட்களில் பிற நாட்டை வென்று கப்பப் பொருள்களாக அந்நாட்டுச் செல்வங்களைப் பெற்று வந்ததாகச் சரித்திரம் சான்று பகர்கின்றது.

அந்த நாளில் சேரன் செங்குட்டுவன் வடநாட்டின்மீது படையெடுத்துக் கனகவிசயரைத் தோற்கடித்துக் கண்ணகிக்குச் சிலை செய்யக் கல் கொண்டுவந்தான். ஆனால் சேரன் வழிவந்த நம்மவர் இந்த நாளில்வடநாடுநோக்கிப்பிழைப்புத் தேடி எழுத்தர்களாக—கணக்கர்களாக — கூலிகளாக — பிச்சைக்காரர்களாகச் செல்கின்றனர்!

அந்த நாளில் கரிகால் பெருவளத்தான் சிங்களம் நோக்கிப் படையெடுத்துப் பன்னிரண்டாயிரம் சிங்களவர்களைக்கைதிகளாக்கிக் கொண்டுவந்து காவிரிக்குக் கரை கட்டினன். ஆனால் இந்த நாளில் கரிகாலன் வழிவந்தோர் சிங்களத்து வீதிகளில் சிந்துவாரற்று, நாயினும் கேடாய் நடத்தப்படுகின்றனர்—சிங்களவர்களால்!

அந்த நாளில் பர்மாவுக்குப் படையெடுத்துச் சென்றான் இராஜேந்திர சோழன். ஆனால் இன்றுபர்மாவுக்கும்மலேயாவுக்கும் செல்ல உரிமையே மறுக்கப்பட்டிருக்கிறது.

அந்த நாளில் சுதந்திரமாக வாழ்ந்தோம். நம்மை நம்மவர்கள் ஆண்டார்கள். ஆனால் இந்நாளில் வெள்ளையனுக்குப் பின், வடநாட்டுக்காரர் ஆளுகின்றார்கள். அடிமையாக உரிமையின்றி உழலுகின்றோம்! விடுதலை வேண்டும் என்று துடிக்கின்றோம்!

நமது நாடு பண்டை நாளில் பெற்றிருந்த சிறப்பையும் — செல்வாக்கையும், இப்போதடைந்திருக்கின்ற சீர்கேட்டினையும் எண்ணிப் பார்க்கும்போது, வேதனையாகவும் இருக்கிறது; வெட்கமாகவும் இருக்கிறது. 'ஏன் இந்நிலை ஏற்பட்டது?' என்ற வினா எழுகிறது நம் உள்ளத்தில். இந்த வினாவிற்கு விடையாக அந்நாளிலேயே இந்த நிலைமை ஏற்படாமல் இருக்க, அந்த நாள் தமிழ் மன்னர்களுக்கு ஔவை ஓர் அறிவுரை தந்திருக்கிறார். ஆனால் அந்த மன்னர்கள் அதனைக் கேட்கவில்லை. கேட்டிருந்தால் இப்படி நாம் வடநாட்டானுக்கு அடிமையாக இருக்கவேண்டியதில்லை. சுதந்திரமாக வாழ்வோம்.

ஒரு காலத்தில், ஓரிடத்தில் சேரமான் மாவண்கோவும், பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதியும், சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கே அமர்ந்திருந்தனர். பொதுவாக தமிழ் வேந்தர் மூவரும் மனத்தால் ஒருமைப்பட்டதில்லை. ஆனால் இம்மூவர்க்கும் பகைமை ஏற்பட்டதில்லையாம். ஆகையால் ஒருங்கே அமர்ந்திருந்தனர். அந்தக் காட்சியைக் கண்ட ஔவையார் பெருமகிழ்வு கொண்டாராம். இந்த மூவரும் பகைத்துக்கொண்டால் வேறு நாட்டவர் புகுந்து தமிழகத்தைக் கைப்பற்றித்தமிழ்ப் பண்பாட்டைச் சிதைத்து, கலை, மொழி, நாகரிகம், முதலியவற்றை அழிப்பர் என்பதை அறிஞர்கள் அறிந்திருந்ததால், அம்மூவரையும் கண்ட அறிஞர்கள் ஒற்றுமையாக வாழ்வதால் ஏற்படும் நலன்களைப்பற்றி எடுத்தோதுவது வழக்கம். அது போன்று அவர்கட்கு ஔவையாரும் அறிவுரைக்கூற எண்ணி அவர்களிடத்தில் "கொற்றவெண்குடை கொடித்தேர் வேந்தர்களே! இத் தமிழகத்தைத் தாமே ஆள வேண்டுமென்றெண்ணி மற்ற இருவரையும் பகைத்து நாட்டை அடிமைப்படுத்திய வேந்தர்கள் இறந்தனர். இறந்த பின் தமிழகம் அவர் பின் செல்லவில்லை. ஆனால் மாற்றார்க்கு உரியதாயிற்று. அப்படி வழிவழியாக வரும் மாற்றாரை வேற்றோர் என்று கருதாது, எவர் தன்னைத் தாங்குகிறார்களோ அவர்கள் பின் இவ்வுலகம் நிறகும் இயல்பினதாயிற்று. ஆதலால் அரசியலை அறநெறியில் செலுத்தி பொருளிட்டி,யார்க்கும், இரவலர்க்கும் வேண்டுவன ஈந்து வாழ்தல் வேண்டும். உங்களை வாழச்செய்த நல்வினையே உங்கள் இறுதி காலத்தில் உயிர்த்துணையாகும். ஆகையால் அந்நல்வினையே செய்வீர்களாக! இவ்வளவே யான அறிந்தது. நீவீர் மூவரும் ஒருமை மனத்தோடு வாழ்வீராயின வானிற்றோன்றும் மீனினும் மழைத்துளியினும் பல்லாண்டுவாழ்வீர்களாக!" என்னும் பொருளில் கீழ்க்கண்ட பாடலைப் பாடினர்.

"நாகத்தன்ன பாகார் மண்டிலம்
தமவே யாயினுந் தம்மொடு செல்லா
வேற்றோ ராயினு நோற்றோர்க் கொரியும்
ஏற்ற பார்ப்பார்க் கீரங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறன் மாந்தி மகிழ்சிறந்
திரவலர்க் கருங்கல மருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலைப் புணைபிறி தில்லை
முத்தீப் புரையக் காண்டக இருந்த

(10-ம் பக்கம் பார்க்க)

"அழகு தப்பியது"

சென்ற இதழ் தொடர்ச்சி...

கட்டுக்கடங்காத மகிழ்ச்சி உடலெங்கும் பாய்ந்து என்னைப் புளகாங்கிதமடையச் செய்தது.

நின்றுகொண்டிருந்த வள்ளியை என்னருகில் அமர்த்தினேன்.

அவள், "ஆனல்......" என்று இழுத்தாள்.

"என்ன ஆனல்...?"

"இங்கு நாம் கணவன் மனைவியாக வாழ அந்தக் கல்நெஞ்சன் விடமாட்டானே; தொல்லை கொடுத்துக்கொண்டேயிருப்பானே."

"இவ்வளவுதானே! நாளையே வேறு இடத்திற்குப் போக என்ன செய்யவேண்டுமோ அதைச்செய்து விடுகிறேன்..."

அவளுக்கு இப்போதுதான் மனநிறைவு பிறந்திருக்கவேண்டும். இல்லையென்ருல் அப்படிப் பெருமூச்சு விடுவாளா? என் கை அவள் கன்னத்தை வருடப்பார்த்தது. அவளோ 'விர்'ரென்று சிட்டாகப் பறந்துபோய்விட்டாள்.

மறுநாளே என்னை வேறு இடத்திற்கு மாற்றிவிடும்படி மாவட்டக் கழகத்திற்கு விண்ணப்பித்துக் கொண்டேன். விரைவில் முடிவதற்கான, 'குண்டை'யும் போட்டு விட்டேன். மாற்றுதல் கடிதம் என்று வருமென்று நானும் வள்ளியும் எண்ணியவாறு இருந்தோம். இதற்கிடையில் பூங்குடியில் பிரபலமான வீடு ஒன்றில் திருமணம். அவர்கள் வழக்கமாக வள்ளியின் வீட்டில்தான் பூ வாங்குவது.

வள்ளி என்னிடத்தில் வந்து, "இன்று மாத்திரம் அவர்களுக்கு பூ கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு இந்தத் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிடுகிறேன" என்ருள்.

நானும் "சரி" என்றேன்.

மாலையில் பள்ளியிலிருந்து வீடு வந்தேன். வீட்டில் வள்ளி இல்லை. நீர் கொண்டுவர ஆற்றுக்குப் போயிருப்பாளென்று எண்ணி உட்கார்ந்திருந்தேன். நேரம் மடிந்து கொண்டேயிருந்தது. என் எண்ணமும் இடிந்துகொண்டேவந்தது. என்னுள்ளம்இருப்புக்கொள்ளாமல் அலைக்கழித்தது. உள்ளே போவதும் வெளியே வருவதுமாய் இருந்தேன். ஒருநாளும் வெளியில் இவ்வளவு நேரம் அவள் இருந்ததில்லையே! ஒருவேளை... என் நெஞ்சம் 'குபீர்' என்று பற்றிய வீடு போல் வேதனையால் எரிந்தது.

இரவு பூராவும் கதவைத்திறந்து வைத்துக்கொண்டு விழித்தபடியே இருந்தேன். எவ்வளவு நேரந்தான் இப்படி இருந்தேனே தெரியாது. அப்படியே அயர்ந்துவிட்டிருக்கிறேன். கதிரவன் ஒளி என் மீது பட்டபிறகுதான் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தேன். என் கண்களுக்கு யாவும் வெறிச்சோடித் தோன்றின.

இரா. மாணிக்கம்

"வள்ளி! எங்கு சென்றுவிட்டாய்? என்னைத் துடிக்கவிட்டு, எங்கு கண்ணே மறைந்திருக்கிருய்? நீ அப்படிச் செய்யமாட்டாயே! உன்னை யாரோ மறைத்துவைத்திருக்கிருர்கள். ஐயோ! உன் அழகுத் திருமேனி இலனோரம் என்ன வாகியிருக்கிறதோ. நினைக்கவே என் நெஞ்சம் கூசுகிறதே!"—என இதயத்தில் சோகச் சுருதி கர்ணகடூரமாக ஒலித்து என்னை நலியச் செய்தது.

கடமைக்காகப் பள்ளிக்குச் சென்றேன. பாடம் சொல்லிக்கொடுப்பதில் என் மனம் ஈடுபடவில்லை. எதை எதையோ எண்ணிக்கொண்டிருந்தேன். அப்போது பிள்ளைகள் 'குசுகுசு'வென்று எதையோ பேசிக்கொண்டிருந்தனர். நான் ஆத்திரத்தோடு "அங்கென்ன பேச்சு" என்று அதட்டினேன்.

ஒரு பையன் எழுந்து 'இன்று விடியற்காலம் மணியின் அப்பா ஆற்றிலே பிணமொன்று மிதந்து சென்றதைப் பார்த்தாராம். அதை மணி சொல்லிக்கொண்டிருந்தான் சார்" என்ருன்.

என் நெஞ்சம் திடுக்கிட்டது. ஏதோ ஒரு அதிர்ச்சி என் இதயத்தைத் தாக்க, நான் அதை அழுத்திப் பிடித்துக்கொண்டு மேசையின் அடியில் முகத்தை மூடிக் கொண்டேன். வீடாய் இருந்தால் அழுதே தீர்த்திருப்பேன். பிரமை பிடித்தவனைபோல் உட்கார்ந்தேன். என் துயரை யாரிடம் சொல்லி அழுவது?

மூன்று நாட்கள் அவலத்தோடு ஓடிவிட்டன. என் மனத்தில் இழையோடிப் பின்னிப் பிணைந்திருந்த இன்பக் கனவுகள் சிதறுண்டுபோக, வெறுமையின் அந்தகாரத்தோடு காலைப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றேன். தலைமை ஆசிரியர் கடிதம் ஒன்றை நீட்டினர். ஆவலோடு பிரித்துப் படித்தேன். துறையூருக்கு மாற்றுதல் செய்திருப்பதை அந்தக் கடிதம் அறிவித்தது.

இந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு வள்ளியோடு பிரயாணம் செய்வோமென்று இறுமாந்திருந்த நான், தனியனுய் நிராசையின் சின்னமாய்ப் போகப்போகிறேன்."

கண்ணீரால் நனைந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டேன். வேறு நேரமாய் இருந்தால் கையிலிருக்கும் கடிதத்தைக் கண்டு வள்ளி புள்ளிமானைப் போல் துள்ளி மகிழ்ந்திருப்பாள். மூட்டை முடிச்சுக்களெல்லாம் ஒரே நொடியில் கட்டிக்கொண்டு என் முன்வந்து நின்றிருப்பாள். இப்போது யார் என்னுடன் வரப் போகிருர்கள்?

என்னுடைய பொருள்களை எடுத்துக்கொண்டு, அதோடு வள்ளியின் நினைவுச் சுமையையும் தூக்கமுடியாமல் தூக்கிக்கொண்டு, ஒரு மைல் தூரமிருக்கும் சாலையை நோக்கி நடந்தேன். ஏறுநடையோடு எக்காளமிட்டுப் போகவேண்டிய நான், நிலை விழந்து நடைப்பிணமாய் நகர்ந்துகொண்டிருந்தேன்.

சாலை நெருங்கிவிட்டது. ஒளியிழந்து மங்கிப்போயிருந்த என் கண்களுக்குச் சிறிது தூரத்தில் யாரோ வருவது தெளிவற்றுத் தோன்றியது. அருகில் நெருங்கி விட்டேன்.

ஆம்! அவள் பெண்... வள்ளியேதான்.

"அத்தான்..."

"வள்ளி..."

கையிலிருந்த பொருளையும் கவனியாமல் வள்ளியை ஆரத் தழுவிக்கொண்டேன்.

"என்னைத் தவிக்கவிட்டு எங்கு சென்றாய் வள்ளி!"

"சொல்லுகிறேன் அத்தான். இப்போது எங்குபோகிறீர்கள்?"

"துறையூருக்கு மாற்றுதல் செய்திருக்கிறார்கள் வள்ளி!"

"புறப்படுங்கள்! இனியும் நாம் இங்கு இருக்கக்கூடாது."

நாங்கள் இருவரும் சாலையை நோக்கி நடந்தோம். "மூன்றே நாளில் பளபளக்கும் அவள் மேனி சாம்பல் பூத்துவிட்டதே. எங்கு போயிருந்தாள்? எப்படியோ வந்துவிட்டாள். என் உயிரைக் குடிக்கவிருந்த வேதனை விலகிவிட்டது"

சாலையை அடைந்துவிட்டோம். மோட்டாரில் ஜனக்கூட்டம் குறைவாகவே இருந்தது. ஒதுக்குப்புறமாக நாங்கள் இருவரும அமர்ந்துகொண்டோம். கதிரவனின் வெம்மையால் காய்ந்து சுருங்கிச் சருகாகிவிட்ட பயிர்கள், குளிர் மழையால் பசுமை கட்டுவதுபோன்று என் உள்ளம் உவகையால் தளிர்விட்டது. என் ஆவல் ததும்பும் பார்வையைக் கண்டு வள்ளி நாணினாள்.

மோட்டார் செல்லத் தொடங்கியது வள்ளி தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

"கலியாண வீட்டில் கொடுத்தது போக மீதியிருந்த பூக்களோடு சிவன் கோயில் பக்கம் வந்துகொண்டிருந்தேன். அங்கே இரண்டுபேர் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் என்னை ஏற இறங்கப் பார்த்தார்கள். ஒருவன் என்னைப் பார்த்து "பூ, விற்பதுதானே" என்றான்.

"ஆமாம்" என்றேன்.

"அதோ ஆற்றங்கரையில் எங்களுடைய பெண்கள் இருக்கிறார்கள். வா அங்கே; அவர்கள் எவ்வளவு கேட்கிறார்களோ, கொடுத்துவிட்டுப்போவாய்" என்றான்.

நான் தயங்கினேன். சீக்கிரம் திரும்பிவிடலாமென்று வற்புறுத்தினார்கள். நம்பிச் சென்றேன். ஆற்றங்கரையின் ஓரத்திலிருக்கும் ஆலமரத்தடியில் ஒரு வண்டி நின்றுகொண்டிருந்தது. பெண்கள் யாருமே இல்லை. பயத்தோடு "எங்கே ஐயா பெண்கள்" என்றேன்.

என் கேள்விக்கா பதில் சொல்வார்கள்? என்னைக் கட்டி வண்டியில் போட்டு வேகமாக ஓட்டினார்கள். பிறகு இரயில் மூலமாக என்னைத் திருச்சி மலைக்கோட்டை புகை வண்டி நிலையத்தில், இறக்கி அருகிலிருந்த ஓட்டலுக்கு அழைத்துச்சென்றார்கள். ஒரு அறையில் விட்டுப் பூட்டினார்கள். என் மனம் இருண்டு துக்க மழையைக் கொட்டியது. என்னை எதற்காகப்பிடித்து வந்து இப்படிச் சித்ரவதை செய்கிறார்கள்? புரியாமல் விழித்தேன். அப்போது பக்கத்து அறையில் பேசும் குரல் கேட்டது. நான் கவனமாகக் கேட்டேன்.

என்னுடல் அதிர்ந்தது. இதயத்தைத் தீப்பந்தத்தால் சுட்டது போல் வெம்பினேன். வியர்வை என்னை முழுக்காட்டியது. 'அழகு ஆபத்து' என்று அடிக்கடி கூறும் தங்கை நினைத்துக்கொண்டேன். என்னழகு என்னை அழிவுக்குக் கொண்டுவந்து விட்டுவிட்டது என்பதை எண்ணி என் உடலையே வெறுத்தேன். "ஐயோ! நான் பலர் கைபட்டுக் கசங்கி அழியப்போகிறேனா? என் அழகுக்கு அழகுசெய்து கொண்டிருந்த அது?... அழிந்து போய்விடுமா?

பயங்கரமான என் எதிர்காலத்தை நினைத்துக்கொண்டு பீதியுற்றேன். இதிலிருந்து தப்புவது எப்படி? என் மனம் திக்குத் தெரியாமல் தவித்தது.

அப்போது என்னை அழைத்து வந்தவர்களில் ஒருவன்வந்து ஏதாவது வேண்டுமா என்றான்.

நான் யோசித்தப்படி "பூ வேண்டும்" என்றேன். மறுபடியும் முகத்தை மகிழ்ச்சியோடு வைத்துக்கொண்டு "இந்த ஊரைப்பார்க்கணும்னு ஆசையா இருக்கு; நானுந்தான் வர்ரேனே" என்றேன். அவனும் சரி என்று கூறிவிட்டான்.

நான் தப்பித்துப்போகச் சந்தர்ப்பம் கிடைக்குமா என்று நோட்டம் விட்டபடி அவனைப் பின் தொடர்ந்தேன். ஒரு பெரிய சாலையைக் கடக்கும்போது ஜன நெருக்கத்திலூடே போகவேண்டியிருந்தது. நான் அவனைத் தொடர்வது போலவே பாசாங்கு செய்து தப்பிவிட்டேன். கடைவீதியில் என் கம்மலை விற்று அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு யார் யாரையோ கேட்டு மோட்டார் நிலையத்தைக் கண்டுபிடித்தேன். பிறகு என்ன? உங்கள் பக்கத்தில் நான் இருக்கிறேனே...

"அத்தான்! நான் அழகாகப் பிறந்துவிட்டதற்காக இந்தச் சமுகம் என்னைப் படுகுழியில் — நஞ்சு கலந்த நீரில் தள்ளப்பார்த்தது. நான் தப்பிவிட்டேன். நான் என்றும் உங்கள் காலடியை விட்டு அகலமாட்டேன்.

அவளுடைய விழி வட்டங்களில் நீர் எல்லையிட்டு நின்றது.

என் நெஞ்சம் பிரமித்துவிட்டது. வள்ளியின் களங்கமற்ற அழகு என்னைக் கரையற்ற ஆனந்தத்தில் ஆழ்த்தியது. வள்ளி தன் அழகை மாத்திரம் காக்கவில்லை. உருகி உருவழிந்து போகவிருந்த என்னையும் காப்பாற்றிவிட்டாள்.

★

8-ம் பக்கத் தொடர்ச்சி

கொற்ற வெண்குடை கொடித்தேர் வேந்திர்
யானறி யளவையோ விதுவே வானத்து
வயங்கித் தோன்று மீனினு மிம்மென
இயங்கு மாமழை யுறைமினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநுந்
நாளே."

(புறம் 367)

இந்தப் பாடல் மூலம், இந்நாடு அந்நியர் ஆட்சிக்குட்பட்டால் தன் மொழி, கலை, செல்வம், பண்பாடு, வாணிகம் முதலிய இன்னபிற பன்னரும் துறைகளும் சீரழிந்துவிடும் என்று உணர்த்தினார். ஆனால், அன்று அம்மன்னர்கள் ஔவையாரது அறிவுரையைக் கேட்டுப்பகைமையின்றிவாழ்ந்திருந்தால், இன்று நம்மை நாமே ஆளலாம். அந்த மன்னர்களும், அவர்கள் வழிவந்தோரும் ஔவை காட்டிய வழியில் செல்லாது—பகைமை கொண்டதனால், தென்னகம் — திராவிடம்அடிமைப்பட்டது. தென்னகத்தின் மொழியும், செல்வமும், கலையும், பண்பாடும் கெட்டுவிட்டது. நம் பழம் பெருமைகளைக் காக்க—நமது நாடு நமதாக—அடிமைத் தளையை அறுத்தெறிய—ஆதிக்க வெறியினை அழித்திட—நாம் பகைமையின்றி ஒற்றுமையுடன் போராடி மீட்டுவோம் திராவிடத்தை!

“தமிழ்ப் பித்தன்”

[தமிழ்மதி]

மாலை நாலரை மணி. பள்ளி மணியின் பேரொலி எழும்பியதும் மாணவர்கள், பை, புத்தகங்களுடன் வீடு நோக்கி விரைந்தனர்.

ஐந்தாம் படிவம், “அ” பிரிவு மாணவர்கள் விழுந்தடித்துக் கொண்டு வெளியே சென்றனர். திவாகர் — அன்பழகனை ஏளனம் செய்து அவமானப்படுத்தவேண்டுமென்று, தன் நண்பர்களை அழைத்துக்கொண்டு வாயிலில் காத்திருந்தான்.

அவன், பணத்தால் ஏழை. ஆனால் அறிவால் செல்வன். அவன் அணிபவை கிழிந்த ஆடைகளே! ஆனால் அவ்வாடைகள் தோய்த்துத் தூய்மையாக இருக்கும். அழகும், அன்பும் கொண்டவன். அவன் தான்—அன்பழகன்.

புத்தகத்தை எடுத்துக்கொண்டு நூலகத்துக்குப் போய்—செய்தித்தாள் படிக்கலாம் என்று புறப்பட்டான். ஏழையான அவனால் பத்திரிகை வாங்கப் பணம் ஏது?

திவாகரின் குழுவினர், அவனைப் பின் தொடர்ந்தனர். சீட்டியடித்தனர். ‘தமிழ்ப் புலவரே’ ‘திருட்டு எழுத்தாளரே’ என்றெல்லாம் சொல்லி ஏளனம் செய்தனர். அன்பழகன் இவர்கள் கூறுவதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் நடந்தான். நூலகத்தினுள் நுழைந்தான்.

திவாகரை— வெற்றிமிடுக்குடன் பார்த்தனர்—அவன் குழுவினர்—அன்பழகனைப் பிடிக்காதவர்கள்—அவன் மேல் பொறாமையுற்றவர்கள்.

திவாகர்—அவர்களை அழைத்துக்கொண்டு, சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்தான். எல்லோரும் காப்பி பருகிக் கொண்டே பேசத் துவங்கினர்.

“திவாகர்! உன்னுடைய— செல்வத்துக்கும், உன்னுடைய நாகரிகத்திற்கும், அந்த அன்பழகன் எம்மட்டு?” என்று புகழ்ந்தான் சேகர்.

“திவாகர்! அன்பழகன் வருவதற்கு முன் நீதான் மாணவர் தலைவனாக இருந்தாய்! மாணவர் சங்கத் தலைவனாகவும் இருந்தாய்! நீதான் படிப்பில் முதல்வனாயிருந்தாய்! ஆனால் அன்பழகன் வந்ததும்...... என்று குறையாகக் கூறி முடித்தான் குமார்.

“அன்பழகன் தன்னுடைய பேச்சாலும், பழகும் முறையாலும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் கவர்ந்துவிட்டான்!” என்றான் சுந்தர்.

அன்பழகன் தமிழ்ப்பற்று மிக்கவன். முடிந்தவரை தனித் தமிழிலேயே — தூய தமிழிலேயே பேசுவேன்! எழுதுவேன்!’ என்ற உறுதியைக் கடைப்பிடித்து வருபவன். மாணவர்களையும், அம்மாதிரி— தனித்தமிழில் பேசுமாறும், எழுதுமாறும் வேண்டிக்கொண்டான். மாணவர்களுள் சிலரும் அம்மாதிரி செய்யத் துவங்கினர்.

இது பிடிக்கவில்லை—வடமொழியும்; இந்தியும் படிக்கும் — திவாகருக்கு. திவாகர்— வழக்கறிஞரின் மகன். கேட்கவேண்டுமா பணத்துக்கு? ‘பணக்காரனிடம் பத்துப் பேர்’ என்ற சொல்லின்படி—திவாகரிடம்— சுற்றிக்கொண்டிருந்தனர் சிலர். அவர்கள் தாம் — சேகர், சுந்தர், குமார் போன்றவர்கள்.

பள்ளியில்— வருகைப் பதிவு எடுக்கையில் — மாணவர்கள், ‘ஆஜர்சார்’ என்றோ ‘பிரசண்ட் சார்’ என்றோ கூறிவந்தனர். அன்பழகன், “நண்பர்களே! பள்ளிக் கணக்கர்—வருகைப் பதிவு செய்கையில் — நீங்கள் — தமிழில் **‘உள்ளேன் ஐயா’** என்று கூறுங்கள்! ‘உள்ளேன் ஐயா’ என்ற அழகான சொல் தமிழில் இருக்க—வாயில் நுழையாத— ‘ஆஜர்சாரும்’, ‘பிரசண்ட் சாரும்’ ஏன் கூறவேண்டும்?” என்று மாணவர்களிடம் பணிவோடு கேட்டான். அவர்களும் அவ்வாறு சொல்ல ஒப்புக் கொண்டனர். இதுவும் பிடிக்கவில்லை—திவாகருக்கு.

“அன்பழகனுக்குப் பணிந்து ‘உள்ளேன் ஐயா’ என்று சொல்லக்கூடாது. அவன் மட்டும் வேண்டுமானால் பெயர் கூப்பிடுகையில் ‘உள்ளேன் ஐயா’ என்று சொல்லிட்டும். நாமெல்லாம் ஆஜர் சார் என்றும் ‘பிரசண்ட் சார்’ என்றுமே சொல்லலாம்” என்றான் திவாகர். சேகர், சுந்தர், குமார் ஆகியோர்—அவன் தீர்மானத்தை ஏற்று அவ்வாறே செய்வதாகச் சொல்லிவிட்டுப் பிரிந்தனர்.

மறுநாள்.

பள்ளிக் கணக்கர்—வருகைப் பதிவுப்பட்டியோடு ஐந்தாம் படிவம் “அ” பிரிவினுள் நுழைந்தார். பெயர்—சொல்லி அழைத்தார்.

“அன்பழகன்”

“உள்ளேன் ஐயா”

“குப்புச்சாமி”

“உள்ளேன் ஐயா” மாணவர்கள் ‘உள்ளேன் ஐயா’ என்றே கூறினர். தமிழாசிரியர் மகிழ்ந்தார்.

ஆனால்—“திவாகர்”

“ஆஜர் சார்”

“சேகர்”

“பிரசண்ட்சார்” என்றனர். மற்றத் திவாகரின் குழுவினரும்—பல்வாறு கூறினர். தமிழ்மகன்— அன்பழகன் ஆத்திரமுற்றான்.

தமிழாசிரியர் பேசினார், “மாணவர்களே! நீங்கள் வருகைப் பதிவின்போது ‘உள்ளேன் ஐயா’ என்று தனித் தமிழில் சொன்னதால் என் உள்ளம் மகிழ்கிறது. ஆனால் திவாகர், சேகர், குமார், சுந்தர் முதலியோர்— ஆஜர்சார் என்றும், பிரசண்ட்சார் என்றும் கூறினார்கள். ‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய—தமிழ் மொழியை—இக்காலத்தில் பேசு

கூசும் கயவர்களின் செயலைச் செய்தார்கள் அவர்கள். அதனால் வருந்துகிறேன். 'உள்ளேன் ஐயா' என்று சொல்லவேண்டும் என்பதைச்செய்து காட்டிய அன்பழகனின் தமிழ்ப்பற்றை உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை! திவாகர்! இன்றிலிருந்து எல்லோரும் 'உள்ளேன் ஐயா' என்றே சொல்லுங்கள்! அதுவே தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டிற்கும், தமிழரினருக்கும் செய்யும் சிறந்த செயல்'' என்று கூறிமுடித்தார்.

அன்பழகன் தமிழாசிரியரைத் தன் மனத்திற்குள் பாராட்டினான்; போற்றினான்: பெருமையாக நினைத்தான்.

அன்று பிற்பகலிலிருந்து மாணவர்கள் 'உள்ளேன் ஐயா' என்று சொல்லத் துவங்கினர். இது கண்டு மற்ற வகுப்புகளும், 'உள்ளேன் ஐயா' என்று சொல்லலாயினர். ஏன் பள்ளிக்கூடமே அவ்வாறு கூறியது!

திவாகர் குமுறினான் பொறாமையால். அவன் 'உள்ளேன் ஐயா' என்று கூறியது தன் 'பெருமதிப்புக்கே' இழுக்கு என்று எண்ணினானோ என்னவோ?

மேலும் அன்பழகனின் செயலால்—சொல்லால்— மாணவர்கள் —ஏன்? திவாகரின் குழுவினரே— தமிழ்ப்பற்று மிகக்கொண்டனர்.

பொறுப்பானா திவாகர்? பெருமைப்படுவானா திவாகர்? பொறாமை மிகக்கொண்டான்.

பொறாமை—எரிந்தது. அன்பழகனை—பள்ளிக்கு வராதவாறு செய்ய எண்ணினான். ஒரு முடிவுக்கும் வந்தான், அது...அது...?

ஒருநாள் மாலை. ஆறரை மணியிருக்கும். அன்பழகன்--நூலகத்திலிருந்து — வீட்டை நோக்கி நடக்கத் துவங்கினான். அவன் உள்ளம் சிந்திக்கத் துவங்கியது.

அன்பழகன்—தாய் தந்தையரை இழந்தவன். அதனால்— அவன் பாட்டியால் வளர்ந்தான். பாட்டிக்கு வயதாகிவிட்டது; கண் பார்வை மங்கியது. உழைக்க முடியவில்லை. வறுமை! பசி!

அதனால்...அன்பழகன் — தன் 'வறுமையைப் போக்கவும், பள்ளியில் படிக்கவும் பணம் வேண்டுமே' என்று எண்ணி — வார, மாத இதழ்களுக்குக் கதை, கட்டுரைகள் எழுத ஆரம்பித்தான். எழுத்துலகில்—சிறந்த எழுத்தாளனானான் அவனது வறுமைவாழ்வு ஓடிக்கொண்டிருந்தது. அவனைப்போல் தான் எழுத்தாளர், வறுமையும், ஏழ்மையும்கொண்டு இருப்பார்களா?

இவ்வாண்டோடு படிப்பைமுடித்துவிட முடிவுசெய்தான். ஆனால் தமிழ்ப்பற்றுக் குறுக்கிட்டது. பள்ளியில்—தூயதமிழில்— பேசவும், எழுதவும், வேண்டும் என்றான்.'உள்ளேன் ஐயா' என்று சொல்வதைத் தலைமையாசிரியரே ஏற்றுக்கொண்டார்.அன்பழகனைப் பாராட்டினார். தன் கடமை முடிந்தது கண்டு — அன்பழகன் அகமகிழ்ந்தான்.

இதற்கிடையில் — அன்பழகன் —திவாகரை எண்ணினான். அவன் பணக்காரன். தற்பெருமையுடையவன். 'அன்பழகன் எல்லாவற்றிலும் உயர்ந்துவிட்டானே! அவன் ஏழையாயிற்றே! என்றெண்ணுவான். ஏழையான அன்பழகன்— உயர்ந்ததைவிட — பணக்காரனே வேறொருவன் உயர்ந்தால்—பொறாமைப்படாமல் இருப்பானோ என்னவோ? யார் அறிவார்?

திவாகர் — அன்பழகன் கதைகளைத் திருட்டுக்கதைகள் என்று சொல்லி இருக்கிறான். அன்பழகன் கந்தலாடை அணிவதை — —இகழ்ந்திருக்கிறான். அன்பழகனின்—தமிழ்ப்பற்றைச் சொல்லி— நகையாடி இருக்கிறான். இதையெல்லாம் சொல்லிய அவன் — 'உள்ளேன் ஐயா' என்று திவாகர் சொல்வது-அன்பழகனுக்கு வியப்பைக் கொடுத்தது.

பாதி தூரம் வந்துவிட்டான். இருண்ட சந்து. விண்மீன்களோ, குளிர்மதியோ இன்றி — வானம் கறுத்திருந்தது. மழை பெய்யும் போலிருந்தது. விரைவாக நடந்தான். மின்விளக்குகளும் எரியவில்லை. அப்போது — நால்வர் அவனை சூழ்வதும் அதேபோது மண்டையில் அடித்துவிட்டு ஓடிவிட்டதும்ஒருவினாடியில் நடந்தது. அன்பழகன் அலறினான். அவன் தலையிலிருந்து குருதி — 'சொட, சொட'வென்று கொட்டியது. "திவாகர்! நீ இப்படி ஆவாய் என்று கனவிலும் கருதவில்லையே! நீயாவது பள்ளியில் — நல்லபடி வாழ்!'' என்றான். நினைவிழந்தான்.

இடி இடித்தது. மின்னல் மின்னியது. மழை பெய்தது.

அன்பழகன், "தமிழா! போதும் உறக்கம்! விழித்தெழு! அமிழ்தினும் இனிய செந்தமிழை அமிழ்த்துகிறார்கள் கயவர்கள்! உணர்ச்சி பெறு! வீறுகொண்டு இந்த நிலையை மாற்று!'' என்று கத்தினான்; முழக்கினான்; சிரித்தான்; பாடினான்; ஓடினான். ஆம்! அன்பழகன் பித்தனானான். தமிழ் மேல் பற்றுக்கொண்டவன்; தமிழ்ப் பித்தனானான். ஆனால் பித்தனாகியும்—தமிழை மறக்கவில்லை! தமிழ் நாட்டை மறக்கவில்லை! தமிழரை மறக்கவில்லை! "தமிழர்களே! உயர் மொழியான — தமிழை வளர்க்கவில்லை! வதைக்கிறீர்கள்! சிதைக்கிறீர்கள்! வடசொல்லும், இந்திச் சொல்லும், ஆங்கிலச் சொல்லும் நுழைத்து ஒழிக்கிறீர்கள்! இருந்து வீரர்களா? தமிழர்களே! தமிழை மறந்ததால்—கவனிக்காததால் — இந்தநிலை ஏற்பட்டது. தமிழ் நாட்டைப் பாருங்கள்! இமயம் பரவியிருந்த தமிழகம் — வடவேங்கடம் வரை இருந்ததமிழகம், இப்போது பரப்பில்—எந்த நிலையில் இருக்கிறது? தமிழ்நாட்டைக்கவனிக்காததால் இந்த நிலை ஏற்பட்டது! உணர்ச்சி பெறுங்கள்! வேண்டாம் இந்த உறக்கம்?'' வீரமுழக்கமிட்டு ஓடினான். எங்கு போனானோ? எப்படி இருக்கிறானோ?

....

இரண்டு நாட்களுக்குப்பின் செய்தித் தாளில் கீழ்கண்ட செய்தி வெளிவந்தது.

இளம் எழுத்தாளன் தமிழ்ப்பித்தன்— அன்பழகன் கைது.

'ஸ்திரீ' 'புருஷர்' சொல் அழிப்பு போராட்டம்.

"எழுத்தாளன் அன்பழகன்— கயவர்கள் சிலரால் — பைத்தியமாக்கப்பட்டான். வயதுபதினாறு தமிழ்நாட்டில் உள்ள புகைவண்டித் தொடர் நிலையங்களில் — கழிப்பறைகளிலெல்லாம் 'ஸ்திரீ' 'புருஷர்' என்று எழுதியிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்! 'பெண்கள்' 'ஆண்கள்' என்ற அருமையான சொற்கள் தமிழில் இருக்க—'ஸ்திரீ-புருஷர்' சொற்கள் எதற்கு? அதனால் தமிழ்ப் பித்தன், பதினைந்து நிலையங்களில் 'ஸ்திரீ-புருஷர்' சொற்களை அழித்தான். காவலர் பார்த்துக் கைது செய்தனர். 'ஸ்திரீ-புருஷர்' சொல் அழிப்புப்போராட்டம் நடத்தி, தமிழை சிறக்கச்செய்வான் என்பது திண்ணம்!''

திவாகர் படித்தான் — பெரு வியப்புக் கொண்டான். கண்ணீர் விட்டான். தந்தையிடம் ஓடினான். பத்திரிகைச் செய்தியைச் சுட்டிக் காட்டி—தன் தவறை, தன் செயலை வழக்கறிஞரான அவரிடம் கூறினான்.

“திவாகர்! அநியாயமாக இப்படிச் செய்துவிட்டாயே! உன்னைச் சொல்லி பயன் இல்லை! உன்னைச் செல்லங் கொடுத்து வளர்த்த என் மேல்தான் தப்பு; சரி புறப்படு!” என்று சொன்னார். காவல் நிலையத்தை அடைந்தனர். அன்பழகனைப் பற்றி—காவல் தலைவரிடம் கேட்க—மருத்துவமனையில் இருப்பதாகவும், பைத்தியம் தெளிந்து வருவதாகவும் கூறினர்.

இரண்டு நாட்களுக்குப் பின் அன்பழகனைப் பைத்தியம் தெளிந்த நிலையில் இருக்கையில், திவாகருடன் வழக்கறிஞர் பார்த்தார். பேசினார்.

“அன்பழகா! உன்மேல்கொண்ட பொறாமையால் உன்னை இந்நிலைக்கு ஆளாக்கிவிட்டான், அவனை மன்னித்து விடு' உன்னை விடுதலை செய்யவே வந்திருக்கிறேன்” என்றார்,

“ஐயா! உங்கள் அன்புக்கு மிகவும் நன்றி. என்னை விடுதலை செய்வது இருக்கட்டும், நந்தமிழ்மொழி — அடிமைத்தளையில் அகப்பட்டு இருக்கிறது. தமிழை விடுதலை செய்யுங்கள்! தமிழ்நாட்டை—திராவிட நாட்டை விடுதலை செய்யுங்கள்! நான் சிறையிலிருந்து இப்போது வெளிவர விரும்பவில்லை. நான் தமிழுக்கும் தமிழ்நாட்டிற்கும் என் உயிர் உள்ளவரை பணிபுரிய விழைகிறேன். என் பாட்டியை நீங்கள் பாதுகாப்பதே எனக்குச் செய்யும் பெருந்தொண்டு!” என்றான்.

திவாகரைப் பார்த்தான், “திவாகர்! உன்னை நான் மன்னித்துவிட்டேன். இனி நீ பொறாமைக்கு இடங்கொடாதே! தவறு செய்து திருந்தியவனாதலால், இனி நீ அதே தவறைச் செய்யமாட்டாய்! பள்ளியில் — தமிழ் வளரப் பாடுபடு! இதுவே உன்னை நான் கேட்டுக் கொள்வது” என்றான் அன்பழகன்.

சிறையிலிருந்து வெளிவர மறுத்த அன்பழகனின்—பண்பை, தமிழ்ப்பற்றை எண்ணிக் கண்ணீர் சிந்தியவாறே வழக்கறிஞரும், திவாகரும் வீடு திரும்பினர்.

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் திடுக்கிடத்தக்க ஆபத்து ஒன்றினைச் சுட்டிக்காட்டுகின்றனர்.

கைத்தறித் தொழிலுக்கு உண்மையிலேயே உதவி செய்ய எண்ணினால் கரையிட்ட துணிகளையும் வண்ணப் புடவைகளையும் ஆலைகள் நெய்வதற்குத் தடை விதித்தால் போதும்' என்று எல்லாரும் எடுத்துச்சொல்லுகின்றனர்.

ஆச்சாரியார் காலத்தில் சட்டமன்றத்தில் இப்படி ஒரு தீர்மானம் நிறைவேறியுள்ளது. நெசவாளர் சங்கங்கள் இதனை [illegible] விண்ணப்பிக்கின்றன. ஆனால் இந்த நிலையில் இந்திய அரசுக்குக் கீழ்ப்படிந்த ‘ஜவுளி கமிஷனர்’ என்ற உயர்தர அதிகாரி ஏற்கனவே உள்ள சில கட்டுப்பாடுகளையும் நீக்கி விடுகின்றார்!

'ஐயா பிச்சை என்று அழுது கேட்பவனுக்கு ஏதாவது கொடுக்காமல் திருப்பி அனுப்புவதோடு, அவன் திருவோட்டில் இருப்பதையே திருடிக் கொள்பவனை என்ன என்று சொல்லுவது? என்ன சொல்வது என்று தெரியாததால்தான் அறிக்கை தயாரிக்கின்றனர். அதிலே ஒரு பகுதி :

“புடவைகள், வேஷ்டிகள் உற்பத்தியைப் பிரத்தியேகமாகக் கைத்தறிக்குப் பூரணமாக ஒதுக்கவேண்டும் என்று கைத்தறி நெசவாளர் ஒரே குரலாகக் கூறிக்கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், புடவைகள் சம்பந்தமாக மில்கள்மீது விதிக்கப்பட்டிருந்த ஓரளவு தடையைக்கூடத் தளர்த்தி ஜவுளிக் கமிஷனர் சமீபத்தில் அறிக்கை விடுத்திருப்பது கைத்தறித் தொழிலுக்கே ஒரு அதிர்ச்சி ஏற்படுத்துவதாகும். மில்களின் தகாத போட்டியினால் கைத்தறித் தொழில் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளது...............

நிலைமை இப்படியிருக்க...... ஜவுளிக் கமிஷனர் விடுத்துள்ள மேற்படி உத்தரவு ஆச்சரியத்தை உண்டுபண்ணுகிறது.”

இந்த அறிக்கையில் உள்ள சொற்களில் தேங்கித் ததும்பும் வேதனையை எப்படி எடுத்துச் சொல்வது?

கைத்தறித் தொழிலுக்கே அதிர்ச்சி தரும் உத்தரவுகளை மத்திய அரசாங்கம் இடும் காரணம் என்ன? அந்தக் காரணம் விளங்குமானால் அறிக்கை தயாரித்தவர்களுக்கு ‘ஆச்சரியம் உண்டுபண்ணும்’ அது, ‘ஆத்திரத்தையே உண்டுபண்ணும். ஆனால் அவர்கள் அதை உணர்ந்துகொள்ள வேண்டுமே!

இதிலே இன்னொரு வேடிக்கை, சட்டமன்றத்திலே இந்தப் பிரச்சினை—வேட்டி புடவைகளை கைத்தறிக்கு ஒதுக்கும் பிரச்சினை—வாக்கெடுப்புக்கு வந்தபோது தறிக்கு என்று தனிச் சலுகை வேண்டாம் என்று காங்கிரஸ் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்கி வாக்களித்தார் திரு. மாரியப்பன். ஆனால் இந்த அறிக்கையில் அவரும் கையெழுத்திட்டிருக்கிறார்! என்ன வாழ்க்கை இது! ஒருபக்கம் கட்சி—இன்னொரு பக்கம் தொழில். இரண்டுக்கும் இடையில் மாரியப்பன் — ஒருவர்மட்டும் அல்ல — ஏராளமானபேர் இப்படி இருப்பதினால்தான், அவர்கள் உள்ளத்தில் நல்லெண்ணம் இருந்தாலும் செயல்பட முடிவதில்லை. ‘மக்களுக்குத் தொண்டுசெய்ய வேண்டும்’ என்று உளமார எண்ணுவார்களாயின் நாம் சொல்லும் உண்மைகளை எளிதில் உணர்ந்துகொள்ள இயலும்.

2-ம் பக்கத் தொடர்ச்சி,

ஸ்டாலின்; சோவியத் யூனியனை விட்டு வேறு நாடுகட்குச் செல்ல வில்லை! அதை இப்போது நான் எண்ணிப் பார்க்கிறேன்— ஸ்டாலினைப் பாராட்டத் தோன்றுகிறது உள்ளத்தில்!

அன்றொருநாள்...! அதே ஸ்டாலின், என்னை, வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த சிலருக்கு எதிரில் நடனமாடச் செய்தார்!

எனது பூத உடலைச் சுமந்து கொண்டு ஆடினேன் — உயிர் உடலைவிட்டுப் பிரிந்து விடக் கூடாது என்ற ஆசையில்! எவ்வளவு ஆத்திரமும் அவமானமும் அப்போது ஏற்பட்டிருக்கும் எனக்கு!

ஆனாலும் அதைவிடப் பன்மடங்கு அவமானத்தை உணருகிறேன் "இன்று! அப்போது அவமானப்பட்டது தனி மனிதனை குருஷேவ்— இன்று அவமானப் படுத்தப்படுவது சோவியத் நாட்டின் முடிசூடா மன்னனாகத் திகழுகின்ற குருஷேவ்!"

சூ என் லாய்

லெனினும் ஸ்டாலினும் செய்யாத ஒன்றை — மாலங்கோவ் செய்யமுடியாத ஒன்றை—செய்து முடிக்கிறேரும், என்ற பெருமிதத்தோடு புறப்பட்டார் அமெரிக்காவுக்கு' பாவம், மூக்கு உடைபட்டுப் பரிதாபத்துக்குரிய நிலையிலே இருக்கிறார் இன்று! என்ன செய்ய?

ஆழந் தெரியாமல் காலை விட்டதன் பலன் இது — அனுபவித்துத் தானே தீரவேண்டும்!

"ஏனிப்படிச் செய்தீர்கள் - எதற்காக அமெரிக்காவுக்குப் போனீர்கள்" என்று சிலர் கேட்கக்கூடும் அவரை—இரஷ்யாவில்!

அவர்கட்கெல்லாம் என்ன பதில் சொல்லப்போகிறார் குருஷேவ்? பதில் சொல்லவேண்டுமெனில் அவ்வளவு எளிதல்ல! வேண்டுமானால், "என்னை எதிர்ப்பதா. இதோ எதிர்த்தோர்தம் சிரங்களைக் கொய்து காட்டுகிறேன்" என்று ஆர்ப்பரித்துப் புறப்பட முடியும்— சிரங் கொய்திடவும் கூடும்!

ஆனால், என்னைப் பொறுத்த வரையில், அவர் அமெரிக்காவுக்குப் போனதையே, நான் விரும்ப வில்லை!

இவ்வளவு பெரிய சீன நாடு— உலகத்திலேயேமக்கள்தொகையை அதிகம் கொண்ட நாடு — அந்த நாட்டுக்கு ஐக்கியநாடுகள் சபையில் இடம் கொடுப்பதற்கு முட்டுக்கட்டை போடும் அமெரிக்காவுக்கு சீன நாட்டின் தோழமை நாடான சோவியத்தின் பிரதமர் எப்படிச் செல்லலாம் — சீனாவை ஒரு வார்த்தைகூட யோசனை கேட்காமல்!

சீனாவுக்கு, ஐக்கிய நாடுகள் அவையில் இடமளித்திடுங்கள் என்று வாதிட்டிருக்கின்றார் — உண்மைதான்! செவிடன் காதில் சங்கு ஊதி என்னபலன்? உறங்கிக் கொண்டிருப்பவர்களைத் தட்டி எழுப்பிவிடலாம் — உறங்குவது போலப் பாசாங்கு செய்கின்றவர்களை எப்படி எழுப்புவது?

அமெரிக்காவுக்குச் செஞ்சீனாவைப் பற்றித் தெரியாதென்று பொருளல்ல. தெரிந்தும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்களென்றால், மற்றவர்கள் சொல்லியா, அவர்கள் பணியப் போகிறார்கள்?

என்னை யோசனைகேட்டிருந்தால், அமெரிக்காவுக்குப் போகவேண்டாம் இப்போது என்று சொல்லியிருப்பேன், திட்டவட்டமாக!

யார் யோசனையையும் கேட்காமல் சென்றார்—சென்ற இடத்தில் அவமானம் அவரை வரவேற்கிறது!

பட்டும், பட்டும்! பட்டால் தானே புத்திவரும்!

பாவம், ஆத்திரத்தோடு எதையெதையோ பேச நினைக்கிறார்— ஆனால் அவர், பாராட்டுவதற்குத் தேவையான ஆங்கிலச் சொற்களை மட்டும்தான் கற்றுக்கொண்டார்— ஓரிரு வாரங்கள் அவர் எடுத்துக் கொண்ட விடுமுறையில்!

எனவே, குருஷேவுக்கு ஏற்பட்டிருக்கிற ஆத்திரத்தில், நூற்றில் ஒரு மடங்குதான், வார்த்தைகளிலே பிரதிபலிக்கிறது — அந்த வார்த்தைகளே என் போன்றோரை பிரமிக்கவைக்கிறது!

ஆனாலும் பரிதாபப்படுகிறேன் அண்டை நாட்டுத் தலைவன்மீது! வேறென்ன செய்யமுடியும் என்னால்?

பண்டித நேரு

"கூடுங்கள் — பேசுங்கள்" என்பதுதான், நான் உலக நாடுகள் அத்தனைக்கும் அன்றாடம் அளித்து வருகிற தாரக மந்திரம்!

அந்தத் தாரக மந்திரத்திற்கு மதிப்பும் மகத்துவமும் நாளுக்கு நாள் பெருகிவருவது கண்டு பெருமிதம் கொள்ளுகிறேன் — எல்லையில்லா மகிழ்ச்சி உள்ளத்தே நுழைகிறது.

"குருஷேவ் அமெரிக்கா செல்வார்—ஐசனோவரைச் சந்திப்பார்— சமாதானப்பேச்சுவார்த்தைகளிலே ஈடுபடுவார்" என்ற செய்தி என துள்ளத்திற்கு எந்த அளவு உவகையூட்டிற்று என்பது எனக்குத்தான் தெரியும்!

ஆனாலும்...?

எந்த அளவு ஆவலோடு சந்திக்கட்டும் பேசட்டும் என்று எதிர்பார்த்தேனோ, அந்த அளவு ஏமாற்றம் இன்று!

வந்தவரை நல்ல முறையிலே வரவேற்று அவரது மனங்கோணாமல் நடந்துகொண்டு, வழியனுப்பியாக வேண்டும் என்ற அடிப்படைப் பண்பாட்டைக்கூட மறந்துவிட்டிருக்கிறார்கள் அமெரிக்க நாட்டினர்—அதனாலே ஆத்திரமடைந்த குருஷேவ் காரசாரமாகப் பேசியிருக்கிறார் சிற்சில இடங்களில்! என்ன செய்ய?

ஆத்திரம் மனிதனுக்கு இயற்கைதான்! அதுவும் பெரியதோர் நாட்டின் தூதுவனாகப் போயிருக்கின்ற ஒருவன் அவமானப்படுத்தப்பட்டால், அவமானப்படுத்தப்பட்டவன், தனக்காக இல்லையென்றாலும் தன் நாட்டின் மானத்தைக் காப்பாற்றவாவது, சிற்சிலவற்றைச் சொல்லித் தீரவேண்டும்!

“நான் அந்த நிலையிலே இருந்தால்...?” என்று ஒரு கணம் எண்ணிப் பார்க்கிறேன்! மறுகணம் குருஷேவைப் பாராட்டத் தோன்றுகிறது எனக்கு!

காரணம், என்னைப்பற்றி உலகு அறியும்! இன்னும் கொஞ்சம் ஆத்திரமாய், நாவிற்கு எந்தவித அணையும் போடாமல், பேசிவிட்டிருப்பேன்!

“நான்சென்ஸ்”—என்று நாவில் அடிக்கடி நடனமிடுகிற சொல்—அதைவிடக் காரமான சொற்கள் பல—என் பேச்சிலே அடிபட்டிருக்கும்!

எனவே குருஷேவ் ஆத்திரமடைந்து அங்கங்கே பேசியிருப்பது தவறென்று நான் கருதமாட்டேன்!

ஆனால், எனக்கிருக்கிற வருத்தமும் வேதனையும் குருஷேவ் பேசிய சில வாசகங்களைப்பற்றித்தான்!

அந்த வார்த்தைகள் எந்த அளவு சூடாக இருப்பினும்—அமெரிக்க நாட்டினர்மீது வீசப்பட்ட தாங்கொணாக் கணைகளாக இருந்திருப்பினும்—நான் இந்த அளவு வருத்தப்பட்டிருக்கமாட்டேன்!

ஆனால்,... அவை... மறைமுகமாக... பாரதத்தைத் தாக்குகின்ற சொற்களாக இருக்கின்றன!

நானென்றும் உங்கள் நாட்டிற்குப் பிச்சையெடுக்க வரவில்லை—பெரியதொரு நாட்டின் தூதுவனாகவே வந்திருக்கிறேன்”

—என்று முழங்கியிருக்கிறார் கடந்த வாரம்!

என்ன பொருள் இதற்கு? யாரைத் தாக்குகிறார் என்று பொருள்?

நாம்தான் அடிக்கடி கடன் கேட்கப் போகிறோம்! நானொரு தடவை போனேன் — டி. டி. கே. ஒரு தடவை—மொரார்ஜி தேசாய் ஒரு தடவை!

அந்த நிகழ்ச்சிகளைத்தான் மனதிலே வைத்துக்கொண்டு, சோவியத் பிரதமர் பேசுகிறாரோ என்று ஒரு சந்தேகம்!

உம்! என்ன செய்ய?

அஜாய் கோஷ்

குருஷேவ் அவமானப்படுத்தப்படுகிறார்—அமெரிக்காவில்!

ஒருவிதத்தில் வேதனையாக இருக்கிறது—கம்யூனிஸ்டு உலகத்தில் இன்றைய தெய்வத்திற்கு இந்தக் கதியா என்று எண்ணும்போது!

மறுவிதத்தில், எனக்கு மகிழ்ச்சிதான்! “பார், பார் குருஷேவை அவமானப்படுத்திவிட்டார்கள்! என்று மக்கள் மத்தியிலே தினம் தினம் முழங்கிவர முடியுமல்லவா! கொஞ்ச நாட்களுக்கு!

கேரளத்தைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம் இதுவரை!

அங்கே காங்கிரசு, யார் யாரோடு கூடிக் குலவுகிறது, எவ்வளவு அக்கிரமங்களைச் செய்கிறது, மனிதப் பண்பை எந்த அளவு மறந்துவிட்டிருக்கிறது என்பதை எடுத்துக்கூறிவந்தோம்!

ஆனால், எங்களை வாயடைப்பது போல், இந்திய—சீன எல்லைத் தகராறு, வந்து எங்களுக்கும் பெரிய தலைவேதனையாகிவிட்டது!

“ஏன் கம்யூனிஸ்டுகள் வாய்திறக்கவில்லை” என்ற கேள்விகள்—“தாயகத்தின் துரோகிகள் அவர்கள்” என்ற கணைகள்—சீன நாட்டை மறைமுகமாக ஆதரிக்கிறார்களோ, என்ற ஐயப்பாடுகள் — இவ்வளவையும் தாங்கிக் கொள்ளவேண்டி நேரிட்டது!

ஆனாலும் யாரும் வாய்திறக்கவில்லை! கேரளத்தின் முதலமைச்சராக இருந்த நம்பூதிரிபாட் மட்டும் மெள்ள வாய்திறந்து, மிக எச்சரிக்கையோடு **“குற்றம் எவருடையதாக இருப்பினும், பேச்சுவார்த்தைகளின்மூலம் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள்”** என்று கூறிவிட்டிருக்கிறார்!

யார் குற்றவாளி என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாத நிலை எங்களுக்கு!

இந்த இக்கட்டானதோர் நிலையில் அலைகடலில் சிக்கித் தவிப்பவனுக்கு ஓர் மரக்கட்டை கிடைப்பதைப்போல், குருஷேவுக்கு அமெரிக்காவில் ஏற்பட்ட அவமானம் பற்றிய செய்தி கிடைத்திருக்கிறது!

இனி எங்கள் “மௌன விரதம்” கலையும்—பழையபடி முழங்குவோம் மேடைகளில் — “வெகுஜனசக்தி”யைத் திரட்டுவோம்—“எதார்த்த வாதத்தை” என்றும்போல் எடுத்துரைப்போம்!

மற்றவர்களைக் கொள்ளையடித்தோ, துன்பத்துக்குள்ளாக்கியோ சுகமடைய விரும்புகிறவன், சாப்பாடு கூட அமைதியாகச் சாப்பிட முடியாது. அவன் டாக்டரின் தயவில்தான் வாழவேண்டியிருக்கும்.

இருளடைந்து போயிருந்த கலையுலகத்தில்
ஒளி விளக்கை யேற்றி வைத்த
ஒப்பற்ற தலைவர்

அறிஞர் **அண்ணா** அவர்களின்
50வது ஆண்டு நிறைவு நாளில்

உதயசூரியன் பிக்சர்ஸாரின்

பெருமை மிகும் அறிவிப்பு

இலட்சிய நடிகர் **எஸ்.எஸ்.ராஜேந்திரன்**
நடிக்கும்....

சிரை ? ஓவியம்

கதை, வசனம்: அறிஞர் **அண்ணா**

பாடல்கள்: கவிஞர் **கண்ணதாசன்**

உதயசூரியன் பிக்சர்ஸ்
11-A வெங்கடரத்தினம் ரோடு, சென்னை-18

BALU
BROS

காஞ்சிபுரம், 98, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில